வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண்.CC54/2022

வழக்கு சாட்சி PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தமிழ்செல்வி | ஜாதி | |
| கணவர்/தந்தை | நடராஜன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 52 |

தேதி 18.10.2024

1,2 எதிரிகள் ஆஜர்இல்லை. 3வது எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் குமரன் நகர் தணிகாச்சலம் நகரில் 32 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக வசித்து வருகிறேன். எனக்கு அ.சா.1 சர்வலிங்கத்தை தெரியும். அ.சா.1 எனது கணவரின் உறவினர் ஆவார். அவர் Repco கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். அ.சா.1 சர்வலிங்கத்தை நான்தான் ராணி, குணசேகரனிடம் அழைத்து சென்று அறிமுகம் செய்து ஏலச்சீட்டு வந்ததில் உறுப்பினராக சேர்த்தேன். நானும் குணசேகரன், ராணியிடம் ஏலச்சீட்டு கட்டிவந்தேன். சர்வலிங்கம், குணசேகரன், ராணியிடம் ஏலச்சீட்டானது 1 லட்சத்திற்கு மேல் கட்டிவந்தார். எவ்வளவு என்று எனக்கு தெரியாது. மேற்படி ஏலச்சீட்டு பணத்தினை குணசேகரன், ராணி வீட்டை விற்று தருவதாக கூறினார்கள். ஆனால் தரவில்லை. போலீசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள். எந்த போலீஸ் என்று தெரியாது.

குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என கூறியதால் குறுக்கு விசாரணையானது முடிக்கப்பட்டது.